RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1956

OPEN ACCESS

# வேதாத்திரியார் பார்வையில் அறநெறிக் கோட்பாடுகள்

மோ. யுவராஜ் [அ, *]

[அ] மனவளக்கலை யோகா ஆசிரியர், பண்ணாரி அம்மன் வித்யா நிகேதன் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம், ஈரோடு-638401, தமிழ்நாடு, இந்தியா

# Ethical Principles in the Eyes of Vedatthriar

M. Yuvaraj [a, *]

[a] Manavalakkalai Yoga Teacher, Bannari Amman Vidya Niketan Matriculation Higher Secondary School, Sathyamangalam, Erode–638401, Tamil Nadu, India

* Corresponding Author: yuvaraj@bavnsathy.ac.in

Received: 01-09-2022
Revised: 17-10-2022
Accepted: 14-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Literature is a translation of the untiring experience of knowledge. The sandalwood forests are the books of literature that the generations meet and enjoy. When literature upholds the immortal truth, its language receives an ascent that will be cherished forever by all. The goal of literature is to shape the experiences of the respective periods with strategies and to direct the succeeding generations. The literature that regulates it is the literature of wisdom. After Thirumoolar and Vallalar, Vedatthriya literature is the literature of wisdom that we have got today. It informs mankind of the evolutionary history of man, his way of life, his future thoughts and actions, and the laws of how to set it up. Who am I, besides laying down the principles of morality, but also the simple exercise to maintain health, the kayakalpa (Transforming lifestyle free of diseases and aging) practices to protect vitality, the scientific methods of meditation to protect mental well-being and the introspection exercises for the sake of character, he has given the philosophy and the practice of Brahma Gnanam, the methods of imparting training for the study of thought, the conditioning of desire, the avoidance of anger, the elimination of anxiety, and the realization of the philosophy of effect. Moreover, he gave the world the motto of 'Long live World, long live with prosperity', removed the darkness of ignorance among the people through the above practices and gave the light of reason through vallalar's guidance, and gave the great art of yoga called yoga and human dignity. Lakhs of people not only in Tamil Nadu but also in various countries have learnt and benefited from this art form. It has also accepted the World Social Service Association as a qualified member of the Economic and Social Organization, a sub-body of the United Nations, which considers the principles of Vedatthriyam.

**Keywords:** Epidemics, Ethics of Life, Ethics in Education, Global General Ethics, Global General Cultural Ethics.

## முன்னுரை

தமிழ்நாடு தத்துவத்தின் விளைநிலம். சங்ககாலம் தொட்டு அறநெறிச் சிந்தனைகள் தமிழர்களின் எண்ணக் கருவில் உருவாகி இலக்கிய வடிவம் பெற்றமையைப் பண்டையக் கால நூல்கள் காட்டுகின்றன. மனித வாழ்க்கை இறைவனால் வழங்கப் பெற்ற ஒரு நற்பேறு. தனிமனித வாழ்வு, சமுதாயம் சார்ந்த வாழ்வு, உலகளாவிய வாழ்வியல் முறைகள், அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ள ஞானிகளும், பட்டறிவு படைத்த சான்றோர்களும்,

இறையருள் பெற்ற ஆன்மீகவாதிகளும், சித்தர்களும், யோகிகளும், கவிஞர்களும், அறநெறிக் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்துள்ளார்கள். இவர்களின் வழியில் வந்த வேதாத்திரியார் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் உள்ள உறவை வழுப்படுத்தவும், மனிதன் தனது மகத்துவத்தை உணரவும், மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவை மேம்படுத்தவும் மனித குலத்தில் அமைதி நிலவவும், காலத்திற்கேற்றவாறும், எதிர்கால சந்ததியினரைக் கருத்தில் கொண்டும் அறநெறிக் கோட்பாடுகளை உலக அளவில் ஆராய்ந்து வழங்கியுள்ளார் (Sivanantham, 2020).

## ஆய்வு முறைகள்

இக்கால இலக்கியங்களில் அறநெறிக் கோட்பாடுகளைக் கொண்ட வேதாத்திரிய ஞான இலக்கியங்களை ஆய்வு செய்து காலத்திற்கேற்ற அறநெறி சிந்தனைகளையும், வாழ்வியல் நடைமுறைச் செயல்பாடுகளையும் இவ்வுலக மக்களுக்கு முழுமையாக அறிமுகப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வின் முதற்கட்டமாக இக்கால நவீன இலக்கிய நூல்கள் வாசிக்கப்பட்டன. அவற்றில் யோகக் கலையுடன் கூடிய அறநெறிக்கோட்பாடுகளும், உலகளாவிய வாழ்வியலில் இறையியல் சிந்தனைகள், கல்வி, பொருளாதாரம், பண்பாடு, மொழி, கலாச்சாரம், உணவுமுறைகள், ஐக்கிய நாடுகளின் சபை செயல்படும் விதம், நீதிமுறை, நிலவுலகுக்கோர் ஆட்சி ஆகிய கருத்துக்களை வேதாத்திரியார் எழுதிய ஞானக்களஞ்சியம் 1,2 ஆகிய நூல்களில் இருந்து உணரமுடிகிறது. பள்ளி மாணவ மாணவியருக்கு வேதாத்திரிய அறநெறிக் கருத்துக்களையும், மனவளக்கலைப் பயிற்சிகளையும் அளிக்கும் போது இக்காலத்திற்கேற்ற அறிவியல் நீதிநெறி கல்வி என்பது இந்த ஆய்வில் இருந்து தெரிய வருகிறது (Vethathiri Maharishi, 2005). வேதாத்திரிய அறநெறிக் கருத்துக்கள் வரைபடம் இட்டும், அட்டவணைப்படுத்தப்பட்டும், கவிப் பாடல்களாலும் செறிவூட்டப்பட்டும் விவரிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக நான் வேதாத்திரிய கோட்பாடுகளை என்னால் முடிந்தவரை குடும்ப வாழ்க்கையிலும், சமுதாயத்திலும், தொழிலிலும், நடைமுறைப்படுத்தும் போது பயனுள்ள வாழ்க்கை வாழ்கிறோம் என்பதை எனது மனைவியுடன் சேர்ந்து செயல்பாட்டில் உணர்ந்தேன். ஆதலால் அனுபோக அனுபவ முறையில் இக்கட்டுரையில் கூறும் தகவல்கள் அனைத்தும் சிறந்த அறநெறி வாழ்வியல் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன.

## ஞானக்களஞ்சியம் நூல் விளக்கம்

ஞானக்களஞ்சியம் 1, 2 நூல்களில் மொத்தம் 1,853 கவிப்பாடல்கள் அடங்கியுள்ளன. இப்பாடல்கள் இறையியல், பொருளாதாரம், அரசியல், சமுதாயம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் ஆகிய ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டும், 1953-ம் ஆண்டு முதல் 2001-வரை இப்புத்தகத்தில் பல்வேறு உட்தலைப்புகளுடன் அனைவருக்கும் எளிமையாகப் புரியும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை எழுதிய வேதாத்திரியார் தத்துவத்திலே அத்வைதத்தையும் யோகத்திலே ராஜ யோகத்தையும் முறையாகக் கற்பிக்கும் உளப்பயிற்சியைப் பாமர மக்களும் உணர்ந்து கொள்கின்ற வகையிலே அமைத்திருக்கின்ற காரணத்தால் இவர் 'பாமர மக்களின் தத்துவஞானி' எனப் போற்றப்படுகிறார். மேலும் இவர் 2000-க்கும் மேற்பட்ட பாடல்களையும், 80-க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் எழுதியுள்ளார் (Dharmalingam & Balachandran, 2021). உலகம் அமைதி பெற வேண்டும் என்பதே வேதாத்திரியாரின் முதன்மையான நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு 1958-ம் ஆண்டு உலக சமுதாய சேவா சங்கம் என்ற அமைப்பை நிறுவினார். இந்த அமைப்பு இன்று இந்தியாவிலும் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், குவைத், சவுதி அரேபியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்கொரியா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

## அறநெறி

"மனதுக்கு அடித்தளமாய், உயிருக்கு உட்பொருளாய்

மறைபொருள் தெய்வமது இருக்கும் உண்மை

மனித மனம் உள்நோக்கி, உயிருணர்ந்து, தானடங்கி
உணர்வதுதான் அனுபவமாம் இறை உணர்வு
புனிதமெனும் அப்பொருளே, பூரித்த அனைத்துயிர்க்கும்
பொருத்தமுள அறிவாக ஆற்றும் உண்மை,
தனிமனிதன் உணர்ந்து, அன்பு மேலோங்கி ஈகையோடு ஒழுக்கமாகத்
தழைத்தொழுகும் வாழ்வேதான் அறநெறியாம்! இயல்பினாக்கம்"

இறைநிலையைத் தனிமனிதன் உணர்வதற்கு அறிவின் வழியில் பயணிக்கும் போதுதான் அவர்களிடத்தில் அன்பு மேலோங்கி, ஒழுக்கம், ஈகை கொண்ட இயல்பான அறநெறி வாழ்வை மேற்கொள்ள முடியும் என்கிறார் (Vethathiri Maharishi, 2016).

## பேரற வாழ்வு


"பிறர்க்காக வாழ்கின்றோம் என்ற உண்மை
பேரறமாய் மனிதவாழ்வில் இயல்பாயிற்று
மறக்காமல் இந்தஉண்மை மனிதர் வாழ்ந்தால்
மற்றவர்கள் மனம்உடலை வருத்து வோமா?
சிறப்பாய் இவ்வறநெறியில் திளைத்து வாழ
சிரமமில்லை, எளிது இதை ஏற்று வாழ்ந்தால்
பிறப்பு இறப்பிடை வாழும் மனிதரெல்லாம்
பேருலகில் நலமோடு வளமாய் வாழ்வோம்"

சமுதாயத்தில் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொண்டும் ஒத்தும் உதவியும் வாழுகின்ற வாழ்க்கை தான் சிறப்பான வாழ்வாகவும், நலமான பேரறம் கொண்ட வாழ்வாகவும் அமையும் என்கிறார் (Vethathiri Maharishi, 2016).

## வாழ்வியல் அறநெறிகள்

மனித வாழ்வில் குழப்பம் வராமல் இருக்கவும், தீமைகள் தோன்றாமல், பெருகாமல் இருக்கவும், விலங்கினங்களுக்குத் தேவைப்படாத ஒன்று மனிதனுக்குத் தேவைப்படுகிறது. அதுவே அறநெறி ஆகும். அது மூன்று விதமாக வேதாத்திரியத்தில் வாழ்வியல் நெறிகளாக வகுக்கப்பட்டுள்ளன. 1.ஒழுக்கம், 2. கடமை, 3. ஈகை

### ஒழுக்கம்




படம் 1. ஒழுக்கம்

வேதாத்திரியம் ஒழுக்கத்திற்கு ஒரு சாம்யத்தை வடிவமைத்துள்ளது. எண்ணம், சொல், செயல் ஆகிய ஏதொன்றாலும் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுணர்ச்சிக்கோ, அறிவிற்கோ, துன்பம் தராத செயல்கள் எல்லாம் ஒழுக்கம் எனப்படும்.

### கடமை

ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்கும் உடலும், அறிவும் சமுதாயத்திலிருந்து பெற்றவையாகும். அவ்வப்போது அனுபோகிக்கும் பொருட்களும் சமுதாயக் கூட்டுறவில் பெற்றதன்றி தனியொருவர் காரணமாக முடியாது. நாம் உண்ணும் உணவில் ஒரு பிடி உணவை எடுத்துக் கொள்வோம் அது நமது கைக்கு வந்து சேர்வதற்குள், அதை உருவாக்கியது முதற்கொண்டு எத்தனை பேருடைய உழைப்புத் தேவைப்பட்டிருக்கும்? எத்தனைத் தலைமுறையினரது அனுபவ ஆராய்ச்சியறிவு தேவையாக இருந்திருக்கும்? இதைதான் வேதாத்திரியார் அவர்கள்

"ஒரு பிடி உணவில் உலக ஒற்றுமை கண்டிடு


உழைப்பால் பதில் உலகிற்குத் தந்திடு

கடமையை உணர்ந்திடு, காலத்தில் செய்திடு

உடம்புக்கும் நல்லது உள்ளமும் அமைதியாம்" (Vethathiri Maharishi, 2016)

### ஈகை

மனித குலத்தின் சிறப்புகளில் ஒன்று பிறர்படும் துன்பத்தைக் கண்டு இரங்குதலும், அந்தத் துன்பத்தைப் போக்க முயலுவதும் ஆகும். அந்த வகையில் எழுந்த செயலே ஈகையாக மலர்ந்தது.




படம் 2. ஈகை

## கல்வியில் அறநெறிகள்

தனிமனித மதிப்பு மற்றும் சமுதாய மதிப்புகள் காகிதங்களோடு நின்று விட்டன அப்படி நின்று விட்ட வாழ்வியல் விழுமியங்களை ஒவ்வொரு தலைமுறையின் கவனத்திற்கும் கொண்டு வரும் சாதனமே கல்வி ஆகும். மதிப்பின் மாண்பை உணர்த்தி மனவளத்தைத் தருகிற கல்வியே முழுமையான, முறையான கல்வியாகும். இதைச் செயலாக்கக் கூடிய கல்விதான் அறநெறிக் கல்வியாகும். இயந்திர மயமாக்கப்பட்ட விஞ்ஞான உலகில் மாணவர்களின் உள்ளங்கள் சீரழிந்து, சமுதாயச் சிக்கல்கள் பெருகி வருகின்றன. பண்பாடில்லாத மனிதர்களை உருவாக்குகிற தொழிற்சாலைகளாக நமது கல்விச் சாலைகள் மாறிவருவதைக் கண்டு வேதாத்திரியார் தமது கவியில்


"கல்வியிலே உயர்ந்த அருட்கல்வியில்லையானால்

கற்ற பெற்ற அத்தனையும் சுயநலமாம் - அன்புக்

கல்வியெனும் சமநோக்கும் நேர்நிறை உணர்வு

கருத்தினிலே உருவாக"

என்கிற பாடல் நமக்குச் சிறந்த கல்வி முறைக்கு வழிகாட்டுதலாக அமைகிறது. மேலும் இன்றைய கல்வித் திட்டத்தில் எழுத்தறிவு, தொழிலறிவு மட்டும் நடைமுறையில் இருக்கின்றன. இவைகளை மாற்றி கீழ்க்காணும் வரைபடம் மூலம் கல்வித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும் (Vethathiri Maharishi, 2016).





படம் 3. கல்வி மாற்றம்

வேதாத்திரியார் அவர்கள் அறநெறியை மனிதர்கள் வாழ்க்கையில் நடைமுறைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு 'சாதனையே அறநெறி' எனும் கவியில் விளக்கியுள்ளார்.

"அறநெறியைப் போதிக்கப் புதிய நூல்கள்
அவசியமே இல்லை இனி மேலும் மேலும்
அறநூல்கள் எத்தனையோ இந்நாள் மட்டும்
அறிஞர் பலர் அளித்துள்ளார் அவையே போதும்!
அறம்பிறழா நெறிநின்று, மக்கள் வாழ
அவசியமாம் பொருட்களொடு கல்வி கிட்ட,
அறவோரே திட்டமிட்டு அமுல் செய்வீரே!
அதன் மூலம் அறம்வளரும் உலகம் உய்யும்" (Vethathiri Maharishi, 2016)

## உலகப் பொதுநெறிகள்




படம் 4. உலகம் அமைதி பெறும் வழிகள்

உலகப் பொது நெறிகளின் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் சபையில் 1975-ம் ஆண்டு அமர்ஷீல்டு அரங்கத்தில் தனி மனித அமைதியின் மூலம்தான் உலக அமைதி பெறமுடியும் என்கிற கோட்பாட்டினை அழுத்தமாகப் பதிவு செய்தவர் வேதாத்திரியார்.

இவர் உலக அளவில் மனித சமுதாயம் அறநெறி வாழ்க்கை வாழ்வதற்குக் கீழ்க்காணும் பொது நெறிமுறைகளைக் காலத்திற்கேற்ப வகுத்துள்ளார்.

அட்டவணை 1. வேதாத்திரியம் பதினான்கு கோட்பாடுகள்

| | |
|---|---|
| 1. போரில்லா நல்லுலகம் | 8. தெய்வ நீதி வழி வாழ்தல் |
| 2. பொருள்துறையில் சமநீதி | 9. தேர்த்திருவிழா தவிர்த்தல் |
| 3. நேர்மையான நீதிமுறை | 10. சிறுவர்கட்கே விளையாட்டு |
| 4. நிலவுலகுக்கோர் ஆட்சி | 11. செயல் விளைவு உணர்கல்வி |
| 5. சீர் செய்த பண்பாடு | 12. சீர்காந்தநிலை விளக்கம் |
| 6. சிந்தனையோர் வழிவாழ்வு | 13. பார்முழுதும் உணவு - நீர் பொதுவாக்கல் |
| 7. சிறப்புணர்ந்த பெண்மதிப்பு | 14. பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றை வழிபடுதல் |

## உலகப் பொதுப் பண்பாட்டு நெறிகள்

மனித இன வாழ்க்கையில் தேவையாலும், சிந்தனையாலும் தொடங்கப் பெற்றுத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் வாழ்க்கை முறையே பண்பாடு எனப்படுகிறது. மனிதகுலப் பண்பாடு ஆதிகால மனிதனிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு செயலும் ஆங்காங்கு அவ்வக் காலத்தில் சூழ்நிலைகளுக்கேற்பத் தொடங்கப்பட்டிருப்பதால் எல்லாச் செயல்களும், எல்லாக் காலத்திலும், எல்லா மக்களுக்கும் பொருத்தமாக இருக்காது. சில செயல்முறைகள் பொருள் இழப்பையும் அறிவுக்குக் குழப்பத்தையும் உண்டாக்கலாம். ஆகையால் அவ்வக் காலத்தில் வாழும் அறிஞர் பெருமக்கள் மனிதகுல வாழ்வின் போக்கையும் விளைவுகளையும் ஆராய்ந்து வாழ்வில் வளம் தழைக்கும் முறையில் திருத்தம் செய்து உதவ வேண்டும். இந்தப் பெருநோக்கில் இக்காலத்திற்கேற்பச் சிறந்ததோர் சீர்திருத்த வாழ்க்கை முறையை ஐந்தொழுக்கப் பண்பாடு என்ற வாழ்க்கை நெறியை கவி வடிவில் வேதாத்திரியம் வழங்கியிருக்கிறது.

"புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்
போதை, போர், பொய், புகை, ஒழித்து அமுல் செய்வோம்
அதிகசுமை ஏதுமில்லை அவரவர்தம் அறிவின்
ஆற்றலினால் உடல் உழைப்பால் வாழ்வதென்ற முடிவும்
மதிபிறழ்ந்து மற்றவர்கள் மனம் உடல் வருத்தா
மாநெறியும் உணவுக்குயிர் கொல்லாத நோன்பும்
பொதுவிதியாய்ப் பிறர் பொருளை வாழ்க்கைச் சுதந்திரத்தைப்
போற்றிக்காத்தும் பிறர் துன்பம் போக்கும் அன்பும் வேண்டும்"

பண்பாட்டின் திருத்தம் காலந்தாழ்த்தாது பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியம். இத்தகைய பண்பாட்டின் மாற்றம் தனிமனிதன் என்ற முறையிலேயும், சமுதாயம் என்ற கூட்டு அமைப்பு முறையிலேயும் தேவையாக உள்ளது (Vethathiri Maharishi, 2016). மேலும் பண்பாடு என்பது காலச்சூழலுக்கேற்ப வளரும் தன்மை கொண்டது. இவ்வளர்ச்சிப் பாதையில் பயன்படக்கூடிய, ஒப்புக் கொள்ளப்பட்ட விரும்பத்தக்க, சமுதாயத்திற்கேற்ற தேவையான கூறுகள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு மற்றவைகள் காலப்போக்கில் விலக்கப்பட்டுவிடும். இவ்விதமாக வந்த பண்பாட்டைத் தூய்மைப்படுத்தியும், புனரமைப்புச் செய்தும், சீரமைத்தும், வேதாத்திரியார் புதியதொரு பண்பாட்டு

நெறியை உருவாக்கித் தந்துள்ளார். அவற்றில் உலக மக்கள் அனைவரும் மிகவும் எளிமையாகப் பின்பற்றும் வகையில் 'இரண்டொழுக்கப் பண்பாடு' எனும் தாரக சாம்யத்தையும் கொடுத்துள்ளார்.

1. நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும், மனதிற்கும் துன்பம் தரமாட்டேன்.
2. துன்பப்படுவோருக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

ஐந்தொழுக்கப் பண்பாட்டைச் செயல்படுத்த முதலில் உலக அளவில் கடைபிடிக்க வேண்டிய நான்கு கோட்பாடுகள்:

1. போதையைத் தரத்தக்க பொருட்களை உபயோகிக்காமல் இருப்பது.
2. போர் என்ற கொடிய கொலைவெறியும், அதன் சீரழிவுகளும் இல்லாது இருப்பது.
3. உடல், மனம், அறிவு, இறைநிலை என்ற நான்கினது இணைப்பில் நிலவக்கூடிய இனிமையைக் கெடுக்கக் கூடிய பொய்யை அறவே ஒழிக்க வேண்டும்.
4. மூளையில் செயல்படுகின்ற தெய்வீகமான சீவகாந்த சிற்றறைகளின் செயல்களைச் சீர்குலைய வைக்கும் புகை (புகையிலை) ஒழிக்க வேண்டும்.

எனவே போதை, போர், பொய், புகையிலை எனும் நான்கு தீமைகளையும் உபயோகிக்காமல் தவிர்த்தால் ஐந்தொழுக்கப் பண்பாட்டினை உலக அளவில் அமலுக்குக் கொண்டு வர முடியும் என்பது உண்மை (Vethathiri Maharishi, 2019).

உடல் உழைப்பையும் அறிவின் திறனையும் கொண்டு பொருள் உற்பத்தி செய்து அதன் மூலம் வாழ்க்கை நடத்துவதே மனித உடல் உள்ள அமைப்பிற்கு ஒத்த இனிமை பயக்கும் வாழ்க்கை முறையாகும். உழைத்துப் பொருள் ஈட்ட முடியவில்லையென்றால் அவர் வாழ்க்கைத் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்து கொள்ள முடியும்? பிறர் வாழ்க்கை வளத்தைப் பறித்துத்தான் அனுபவித்து வாழ வேண்டும். இந்தப் பறித்துண்ணல் முறையால்தான் வாழ்வில் எண்ணிறைந்த சிக்கல்களும், குற்றங்களும், துன்பங்களும் உண்டாகின்றன. இந்தப் பறித்துண்ணல் முறையைச் சமுதாயத்தில் வளரவிடக் கூடாது. தனது உழைப்பாலும் அறிவின் திறமையாலும் உணவை உற்பத்திச் செய்து வாழத் தெரியாத காரணத்தால்தான் விலங்கினங்கள் ஒன்றையொன்று கொன்று தின்று உயிர் வாழ்கின்றன. இதேபோல் மனிதகுலத்திலும் தனது உழைப்பின் பலனைக் கொண்டு வாழத் தெரியாதவர்கள் பெரும்பாலும் குற்றவாளிகளாகவும், பிறர்க்குத் துன்பம் அளிப்பவர்களாகவும் வாழ்கின்றார்கள். இந்த முறையை அடியோடு மாற்றியமைக்கச் சமுதாயச் சீர்திருத்தம் அவசியம். இந்தத் திட்டம் ஓர் உயிரைக் கொன்று அதன் உடலை உணவாகக் கொள்ளும் வன்முறை வாழ்வும் தவிர்க்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. பிறருடைய சுதந்திரத்தையும், பொருள் உடைமை உரிமையையும், மதித்தும், போற்றிக் காத்தும் வாழ வலியுறுத்துகிறது. இத்தகைய பண்பாட்டின் சீர்திருத்தம் மனிதகுல வாழ்வின் வளத்திற்கு இன்றியமையாததாகும்.

## முடிவுரை

இன்றைய சமுதாயம் கடலையும், வானையும் வெல்லும் வழிகள் கண்ட பின்பும் வாழ்க்கை எவ்வாறு வாழப்பட வேண்டும் என்கிற வழியறியாமல் மயங்கி நிற்கும் மானிட குலத்திற்குத் தத்துவ ஆராய்ச்சியின் உச்சத்திற்குச் சென்ற வேதாத்திரியார் மனிதகுலம் நிறைவோடும், அமைதியோடும் வாழ வேண்டும் எனக் கருதி பல்வேறு அறநெறிக் கோட்பாடுகளை நவீன காலத்திற்கேற்றவாறு வகுத்தளித்துள்ளார். அவற்றில் தனிமனித வாழ்க்கை நெறிகள், கல்வியில் அறநெறிகள், உலக பொதுநெறிகள், பண்பாட்டு அறநெறிகள் ஆகியவற்றை ஆய்வு செய்கையில் தனிமனிதன், சமுதாயம், உலகநியதி, வாழும்முறைகள், உலகளாவிய சிந்தனைகள் ஏற்பட்டதுடன் முற்கால அனுபவம் தற்காலச் சூழ்நிலை, எதிர்கால விளைவு இவற்றைக் கருத்தில் கொண்டுதான் வேதாத்திரியத்தின் அறநெறிக் கோட்பாடுகள் அமையப் பெற்றுள்ளன. மேலும் இவ்வறநெறிக் கோட்பாடுகள் இவ்வுலக மக்கள் அனைவரும் எளிமையாகப் பின்பற்றக் கூடிய ஒன்றுதான் என்பதே ஆய்வின் முடிவாக அமையப் பெற்றுள்ளது.

## References

Dharmalingam, T.S., Balachandran, P. (2021) Yogic Discipline in an individual human life, International Research Journal of Tamil, 3(4), 197-205. https://doi.org/10.34256/irjt21424

Sivanantham, D. (2020) Individual Human Life Morality of Vethathiri Maharishi. International Research Journal of Tamil, 3(1), 56-65. https://doi.org/10.34256/irjt2117

Vethathiri Maharishi, (2005) Gnana Kalangiyam, World Community Service Centre, Vethathiri Publications, Erode, India.

Vethathiri Maharishi, (2016) Gnana Kalangiyam, 2nd Edition, World Community Service Centre, Vethathiri Publications, Erode, India.

Vethathiri Maharishi, (2019) Gnana Kalangiyam, 7th Edition, World Community Service Centre, Vethathiri Publications, Erode, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License